பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 04 2025 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள் தண்டிக்கப்படுவது உறுதி என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. சட்டீஸ்கர் - தெலங்கானா மாநில எல்லையில் மூன்று மாவோயிஸ்டுகள் பாதுகாப்புப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

4. இலங்கையில் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலுக்கான தபால் வாக்குப்பதிவு இன்று தொடங்கியது.

5. துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள் தண்டிக்கப்படுவது உறுதி என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய பஞ்சாயத்துராஜ் தினத்தையொட்டி, பீகார் மாநிலம் **Madhubani**–யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிரதமர், பஞ்சாயத்துராஜ் விருதுகளை வழங்கினார்.

பீகார் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சுமார் 13 ஆயிரத்து 480 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

மேலும், நமோ பாரத், அம்ரித் பாரத் உள்ளிட்ட ரயில் சேவைகளை தொடங்கிவைத்த பிரதமர், புதிய ரயில் பாதைகளையும் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

பிரதமரின் வீட்டுவசதித் திட்டப்பயனாளிகளுக்கு வீடுகளை ஒப்படைத்ததுடன், புதிய பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், கடந்த பத்தாண்டுகள் இந்தியாவில் கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான ஆண்டுகளாக அமைந்ததாக கூறினார்.

நவீன கட்டமைப்பு வசதிகள், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு அடித்தளமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கிராமப்புற பொருளாதாரம் தற்போது புதிய உத்வேகம் பெற்றிருப்பதாக கூறிய அவர், 12 கோடிக்கும் அதிகமான குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பும், சுமார் இரண்டரை கோடி வீடுகளுக்கு மின்சார இணைப்பும் வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

வரும் ஆண்டுகளில் ஏழை மக்களுக்கு மூன்று கோடி வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு அடுப்புகளில் உணவு சமைப்போம் என்று நினைத்துக்கூட பார்த்திராத மக்களுக்கும் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக பிரதமர் கூறினார்.

முன்னதாக, பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இந்த நிகழ்ச்சியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<<>>>>>

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் அக்கட்சியின் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இதில், காஷ்மீர் விவகாரத்தில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் நாடாளுமன்ற குழுத்தலைவர் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில் பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டதுடன், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

<<<<<>>>>>

காஷ்மீர் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த ஆந்திராவை சேர்ந்த தகவல் தொழில்நுட்ப பொறியாளர் மதுசூதன் ராவ் உடல் இன்று காலை சென்னை கொண்டுவரப்பட்டு, அவரது சொந்த ஊரான நெல்லூருக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

முன்னதாக, விமான நிலையத்தில் அவரது உடலுக்கு மத்திய தொழில் பாதுகாப்புப்படையினர், தமிழக பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே, காஷ்மீருக்கு சுற்றுலா சென்ற தமிழகத்தை சேர்ந்த 50 பேர் விமானம் மூலம் இன்று சென்னை அழைத்து வரப்பட்டனர்.

அவர்களை மாநில அரசு அதிகாரிகள் வரவேற்று, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

<<<<<>>>>>>

வீர தீர செயல்புரிந்த மற்றும் சாதனை படைத்த குழந்தைகளுக்கான பிரதமரின் தேசிய பால் புரஷ்கார் விருதுக்கான விண்ணப்பங்கள் ஜூலை 31-ஆம் தேதிவரை வரவேற்கப்படுவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.

2025-ஆம் ஆண்டுக்கான இந்த விருதுக்கு சுற்றுச்சூழல், விளையாட்டு, சமூக சேவை, கலை – கலாச்சாரம், அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் சாதனை படைத்த மற்றும் துணிச்சலான செயல்களில் ஈடுபட்ட குழந்தைகள் **award.gov.in** என்ற இணையதளம் வாயிலாக தாமாக விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மற்றவர்களும் இத்தகைய சாதனையாளர்களின் பெயர்களை பரிந்துரைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் ராணுவ வீரர் ஒருவர் வீரமரணமடைந்தார்.

உத்தம்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட **Dudu-Basantgarh** பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது, தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதையடுத்து, ராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

அப்பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>>**

உலக தடுப்பூசி வாரம் இன்று தொடங்குகிறது.

உலக சுகாதார அமைப்பின் சார்பில், இம்மாதம் 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த இயக்கத்தின்போது உயிர்காக்கும் தடுப்பூசி பயன்பாடு குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

"அனைவருக்கும் தடுப்பூசி மனிதர்களால் சாத்தியம்" என்பதே இந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

இதன்படி, வயது அல்லது இருப்பிடம் எதுவாக இருந்தாலும், அவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது உறுதி செய்யப்படும்.

கடந்த 50 ஆண்டுகளில் தடுப்பூசி செலுத்தியதன்மூலம், உலகெங்கும் 15 கோடியே 40 லட்சத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காப்பாற்றப்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>>**

நாட்டில் தட்டம்மை – **Rubella** பாதிப்புகளை முற்றிலும் தடுப்பதற்கான இயக்கத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த ஜனவரி முதல், மார்ச் மாதம் வரையிலான காலத்தில் நாட்டில் உள்ள 322 மாவட்டங்களில் தட்டம்மை பாதிப்பு ஏதும் கண்டறியப்படவில்லை என்றார்.

அதேபோன்று, 487 மாவட்டங்களில் **Rubella** பாதிப்பு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கத்தின்மூலம் கோடிக்கணக்கான குழந்தைகளின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படும் என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

சட்டீஸ்கர் - தெலங்கானா மாநில எல்லைப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மூன்று மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சட்டீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட **Karregutta** மலைப்பகுதியில் மாவோயிஸ்ட் அமைப்பின் முக்கிய நிர்வாகிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் சட்டீஸ்கர், தெலங்கானா மற்றும் மகாராஷ்ட்ரா மாநில எல்லைப்பகுதிகளில் பாதுகாப்புப்படையினர் கடந்த இரண்டு நாட்களாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பகுதியில் மாநில காவல்துறையினருடன், இணைந்து மத்திய ரிசர்வ் காவல்படையினரும் தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

அமெரிக்காவுடன் வர்த்தக உடன்படிக்கைகளில் கையெழுத்திடும் முதல் நாடாக இந்தியா இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு **Scott Bessent** தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரி விதிப்பு அல்லாத வர்த்தக தடைகள் மற்றும் அரசு மானியங்கள் தொடர்பான பிரச்சினைகளைத்தான் இந்தியா எதிர்கொள்வதாக கூறினார்.

இந்த பிரச்சினைகள் சாதாரணமானவை என்பதால், இவற்றுக்கு எளிதாக தீர்வுகாணப்பட்டு, ஒப்பந்தம் ஏற்படக்கூடும் என்றும் திரு **Scott Bessent** நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

இலங்கையில் அடுத்த மாதம் 6-ஆம் தேதி நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலுக்கான தபால் வாக்குப்பதிவு இன்று தொடங்கியது.

அரசு ஊழியர்கள், ராணுவ வீரர்கள், காவல்துறையினர், ஆசிரியர்கள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் பணியாற்றும் ஆறு லட்சத்து 48 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வரும் 29-ஆம் தேதிவரை தபால் வாக்குகளை பதிவு செய்யலாம்.

இந்த கால அவகாசம் நீட்டிக்கப்பட மாட்டாது என்பதால், தபால் வாக்கு பதிவு செய்ய தகுதிபெற்ற அனைவரும் இந்த வாய்ப்பை தவறாது பயன்படுத்தி, தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றுமாறு இலங்கை தேர்தல் ஆணையர் திரு சமன் ஸ்ரீ ரத்நாயக்கே கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 7-6 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **'Abigail Rencheli-**ஐ வென்றார்.

<<<<<>>>>>>

ஃபெடரேஷன் கோப்பைக்கான தடகள சாம்பியன் போட்டியின் மகளிர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் மகாராஷ்ட்ராவின் **Sanjivani Jadhav** தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<>>>>>>

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்றிரவு மணி 7.30-க்கு இப்போட்டி நடைபெறவுள்ளது.

<<<<<END>>>>>>